4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 623 / 2022 நாள்: 28.11.2024 வா.சா.1– மூர்த்தி

குறுக்குவிசாரணை

நான் அரசு கேபிள் டிவி தொழில் கொமரலிங்கத்தில் 30 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். எனக்கு மாத வருமானம் செலவு போக ரூ.20,000/– கிடைக்கும். ஆரம்பத்தில் ரூ.10,000/– வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் அரசு பணியாளர் அல்ல. வா.சா.ஆ.1–ன் படி நாங்கள் மூவரும் கொடுத்த தொகையில் நான் கொடுத்த ரூபாய். 6,50,000/– ஆகும். மீதமுள்ள தொகையை அவர்கள் இருவரும் செலுத்தியுள்ளார்கள் எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் ரூ.6,50,000/– கையிருப்பில் வைத்திருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சரவணன் வங்கி மூலம் ரூ.9,00,000/– செலுத்தியுள்ளார். இறந்துபோன செந்தில் குமார் எனக்கு அவருடைய சகோதரர் சிவக்குமார் மூலம் பழக்கம் என்றால் இருவருமே எனக்கு பழக்கம் தான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்கள் ஏற்படுத்துவதற்கு முன்பே பிரதிவாதிகள் செந்தில்குமாரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 வா.சா.ஆ.2 ஆவணங்கள் ஏற்பட்டபோது பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2,3 வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். அவர்கள் உறவினர்கள் என்று வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்கள் தவிர எங்களுக்கும் இறந்துபோன செந்தில் குமாருக்கும் வேறு எந்த தொடர்பும் கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணம் குடும்ப செலவுக்காக அவர் பணம் கேட்டதன் அடிப்படையில் கொடுத்து ஏற்பட்டது. வா.சா.ஆ.1 மற்றும்

வா.சா.ஆ.2 ஆவணங்களில் செந்தில் குமாரின் சகோதரர் சிவகுமார் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அடமானப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை ஊர்ஜிதப்படுத்துவதற்காக செந்தில்குமார் பெயரிலுள்ள ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளோம். மேற்படி சொத்தின் முந்தைய பாத்தியஸ்தர் குறித்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தற்போது எஸ்.வி.புரத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2015–ம் ஆண்டு முதலே மேற்கண்ட செந்தில்குமார் புறக்கணித்ததால் தனியாக வசித்து வந்தார்கள் என்றால் தெரியாது. அதுமுதல் செந்தில்குமார் இறக்கும் வரை அவருடன் பிரதிவாதிகளுக்கு எந்த பேச்சுவார்த்தையும் கிடையாது என்றால் சரிதான். சொத்துக்கள் முறையாக பாகப்பிரிவினை செய்யாமல் உள்ளது என்றும் செந்தில் குமாரின் சகோதரர் சிவக்குமார் சொத்தை அடைவதற்காக எங்கள் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் செந்தில்குமாருக்கு செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் பாத்தியப்பட்டதாகும். செந்தில்குமார் என்ன உடல்நலக்குறைவால் இறந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. உடல்நிலை சரியில்லாததால் சிகிட்சை பெற்று வந்தார். அவருடைய சகோதரர் சிவக்குமார் தான் அவருக்கு மருத்துவசிகிச்சை பெற உதவி வந்தார் என்றால் சரிதான். செந்தில்குமார் இறந்த விபரம் சிவக்குமார் கூறிதான் தெரியும் என்றால் உள்ளூர் என்பதால் மேற்படி விபரம் எனக்கு தெரியும். செந்தில்குமார் குடிபழக்கம் உள்ளவர் என்கிற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மூதாதையர் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக செந்தில்குமார் மதுபோதையில் இருக்கும்போது அறியாத நிலையில் சிவக்குமார் உதவியுடன் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. (வாதிகள் தரப்பில் மேற்படி கேள்வி எதிர்வழக்குரையில் எந்த விபரங்களும் இல்லாமல் கேட்கப்பட்டதாக கூறி, எழுப்பட்ட ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்பட்டது) செந்தில்குமார் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்க்கவில்லை

என்றால் சரியல்ல. படித்து பார்த்தேன். செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணம் செந்தில்குமார் கொடுக்கவில்லை. நகல் கொடுத்துள்ளார். 05.09.2018 அன்று செந்தில்குமாருடன் நாங்கள் ஒரு போக்கிய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.மேற்படி போக்கியபத்திரத்திலும், சிவக்குமார் தான் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அசல் எங்களிடம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி போக்கிய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 ஆகும். செந்தில்குமாரின் சொத்துக்களை அபகரிப்பதற்காக சிவக்குமார் உதவியுடன் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.1 ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1—ம் பிரதிவாதிக்கு தெரியாமல் ஏற்பட்டதால் மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்ற பிறகு தான் பிரதிவாதிகளுக்கு மேற்படி ஆவணங்கள் குறித்த விபரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. செந்தில்குமார் இறந்தவுடன் மேற்படி விபரத்தை நாங்கள் அவர்களிடம் தெரிவித்துவிட்டோம். பிரதிவாதிகளை விட்டு தனியாக பிரிந்து வாழ்ந்த செந்தில்குமாருக்கு ரூ.20,00,000/— மற்றும் வா.சா.ஆ.2 படியான ரூ.1,00,000/— அவசியமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் அதில் குறிப்பிட்டுள்ள அவசியத்திற்காக ஏற்படவில்லை என்றும் எனவே அவற்றின் அடிப்படையில் நாங்கள் பரிகாரம் கோர முடியாது என்றும் பிரதிவாதிகள் அந்த தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும் சரியல்ல. தாவா கடனுக்கு வழக்கு சொத்துக்கள் பொறுப்புடையதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம். C. ராஜலிங்கம் B.A.,B.L.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.